தடுத்தல் இணைப்பின் LIGHTHOUSE INITIATIVE வழங்குகிறது

# பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டம்

— ஒரு தகவல் வழிகாட்டி —

## “உங்களுடைய உரிமைகள் எவை என உங்களுக்குத் தெரியுமா?”



### பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சட்டம் என்றால் என்ன (WSIA)?

WSIA என்பது, அவர்களுடைய வேலையின் விளைவால் காயப்படும் அல்லது நோய்வாய்ப்படும் பணியாளர்களின் **ஆதாயங்களுக்கான தகுதி மற்றும் சேவைகளுக்கு** அதிகாரமளிக்கும் ஒன்ராறியோச் சட்டம் ஆகும்.

### WSIA ஆல் காப்பீடு செய்யப்படுபவர்கள் யார்?

**அனைத்து** ஒன்ராறியோ பணியாளர்களையும் WSIA காப்பீடு செய்யாது.

### WSIAஐ நிர்வகிப்பவர்கள் யார்?

- **பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதிச் சபை (WSIB)** WSIAஐ நிர்வகிக்கிறது.
- காயப்பட்ட பணியாளர்களின் ஆதாயங்களுக்கான உரிமம் மற்றும் சேவைகளைத் தீர்மானிப்பதற்கான **சொந்த நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளை WSIB தானே உருவாக்குகிறது**.
- பின்வருவனவற்றுக்கான உரிமத்தைக் காயப்பட்ட பணியாளர்கள் கோர முடியும்:
  - ஊதிய இழப்பு ஆதாயங்கள்
  - நிரந்தரமான காயம்/வலியாலான இழப்பை ஈடுசெய்யும் ஆதாயங்கள்
  - ஆரோக்கியப் பராமரிப்புக்கான காப்பீடு
  - வேலைக்குத் திரும்பச் செல்வதற்கான உதவி
- ஒன்ராறியோ வேலைவழங்குநர்கள் WSIBக்கு நிதியளிக்கின்றனர். இது **வரிமூலம்-நிதியளிக்கப்படும் ஒரு அமைப்பு அல்ல.**
- குறித்த காலவரையறைக்குள், **WSIB தீர்மானங்களுக்கு மேன்முறையீடு** செய்யும் உரிமை பணியாளர்களுக்கும் வேலைவழங்குநர்களுக்கும் உள்ளது.



### வேலையில் இருக்கும்போது காயம்/வலி ஏற்பட்டால் செய்யவேண்டியவை

#### பணியாளர்

- **மருத்துவக் கவனிப்பை** உடனடியாகப் பெறவும்
- **முடிந்தளவு விரைவாக** அந்தக் காயம்/வலி பற்றி வேலைவழங்குநருக்கு நீங்கள் அறிவிக்க வேண்டும்
- **சட்டப்படி**, ஒரு காயம்/வலி பற்றி நீங்கள் அறிவித்ததற்காக **உங்களை வேலையிலிருந்து நீக்க முடியாது**
- **WSIB படிவம் 6**ஐப் பூர்த்திசெய்தல் (காயம்/நோய் பற்றிப் பணியாளரின் அறிக்கை)

#### வேலைவழங்குநர்

- வேலையிட காயம்/வலி அல்லது நோய் பற்றி **புலன்விசாரணை** மற்றும் **ஆவணப்படுத்தல்**
- **WSIB படிவம் 7**ஐப் பூர்த்திசெய்தல் (காயம்/நோய் பற்றி வேலைவழங்குநரின் அறிக்கை)
- காயம்/வலி வந்த அந்த நாளுக்கான **ஊதியங்களைப் பணியாளர்களுக்குச்** செலுத்தல்

#### மருத்துவர் அல்லது ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர்

- வேலைக்குத் திரும்பிச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகளுக்கான **சிபாரிசுகளை** வழங்கல்
- பணியிட காயம்/வலியுடன் தொடர்பான **தகவல்களை** WSIBக்கு வழங்கல்
  - **WSIB படிவம் 8**ஐப் பூர்த்திசெய்தல் (ஆரோக்கிய நிபுணரின் அறிக்கை)



### கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் நேரம்

#### பணியாளர்கள்

**உடனடியாகவோ**, காயம்/வலி ஏற்பட்ட நாளில் இருந்து **6 மாதங்களுக்குப் பிந்தாமலோ** கோரிக்கை ஒன்றை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

#### வேலைவழங்குநர்கள்

பின்வருவன அந்தப் பணியாளருக்குப் பொருந்தினால், அந்தக் காயம்/வலி ஏற்பட்ட நாளில் இருந்து **3 நாட்களுக்குள்**, அது பற்றிய கோரிக்கை ஒன்றை வேலைவழங்குநர்கள் சமர்ப்பிக்க வேண்டும்:

01. ஆரோக்கியப் பராமரிப்புத் தேவைப்படுகிறது.
02. வழமையான வேலைக்கு வராமல் இருக்கிறார்.
03. வழமையான வேலையில் வழமையான ஊதியத்தைவிட குறைவாகச் சம்பாதிக்கின்றார்.
04. வழமையான ஊதியத்தைவிடக் குறைந்த ஊதியத்தில் மாற்றியமைக்கப்பட்ட கடமைகள் தேவைப்படுகிறது.
05. ஏழு நாட்களுக்கும் அதிகமாக வழமையான ஊதியத்தில் மாற்றியமைக்கப்பட்ட கடமைகள் தேவைப்படுகிறது.

### பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், நஷ்ட ஈடு கோரமுடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா

- வேலையுடன் தொடர்பான **நோய்** ஒன்று உங்களுக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- வேலையுடன் தொடர்பான **மன அழுத்தம் சார்ந்த நிலைமைகள்** உங்களுக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- வேலையுடன் தொடர்பான **உளவியல்ரீதியான நிலைமைகள்** உங்களுக்கு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- காலப்போக்கில், வேலையுடன் தொடர்பான **காயம்/வலி** உங்களுக்குப் படிப்படியாக உருவாகியுள்ளது.



### WSIB கோரிக்கை ஒன்றுக்கு எங்கே நீங்கள் உதவிபெறலாம்?

OFFICE OF THE WORKER ADVISER:
**www.owa.gov.on.ca** அல்லது **1-800-435-8980**

INDUSTRIAL ACCIDENT VICTIMS GROUP OF ONTARIO (IAVGO):
**www.iavgo.org** அல்லது **416-924-6477**

INJURED WORKERS' CONSULTANTS (IWC):
**www.injuredworkersonline.org** அல்லது **416-461-2411**

LEGAL AID ONTARIO:
**www.legalaid.on.ca** அல்லது **1-800-668-8258**

cope LOCAL 343

**ஆதாரவளங்கள்**

WWW.PREVENTIONLINK.CA
WWW.WSIB.ON.CA
WWW.ONTARIO.CA/LAWS/STATUTE/97W16

LIGHTHOUSE INITIATIVE
PREVENTION LINK

PREVENTION LINK DISABILITY PREVENTION AT WORK

preventionlink.ca